# பெப்ரவரி - 21 - செவ்வாய்

**புனித பீட்டர் டேமியன்**

**“தீமையினின்று விலகு: நல்லது செய் எந்நாளும் நாட்டில் நிலைத்திருப்பாய்” (தி.பா.37:27)**

---

## முதல் வாசகம்: சீராக்கின் ஞானம் 2:1- 11

மகனே, நீ கடவுளுக்கு ஊழியம் செய்யப் போகையில் நீதியிலும் அச்சத்திலும் நிலைகொண்டு, சோதனைக்குத் தப்ப உன் ஆன்மாவை ஆயத்தப்படுத்து.உன் இதயத்தைத் தாழ்த்தி அமைந்திரு. செவிகொடுத்து நல்லறிவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள். கலக்க நேரத்தில் ஆத்திரப்பட்டு யாதொன்றும் செய்யாதே. ஆண்டவருடைய இரக்கத்தின் காலம் வரைக்கும் காத்திரு. அவரோடு ஒன்றித்துக் கடைசியில் உன் வாழ்க்கை பலன் கொடுக்கும்படி பொறுமையாய் இரு. உனக்கு நேர்வன எல்லாவற்றையும் பொறுத்துக் கொள். துன்பத்தில் திடமாயும், தாழ்வில் பொறுமையாயும் இரு.பொன்னும் வெள்ளியும் நெருப்பினால் சுத்தமாவது போல, மனிதரும் தாழ்ச்சி என்னும் உலையில் தகுதியானவர்கள் ஆகிறார்கள்.கடவுள் பால் உன் விசுவாசத்தை வை. அவர் உன்னைக் காப்பாற்றுவார். செவ்வழியில் சென்று, அவர்பால் உன் நம்பிக்கையை வை. அவருக்கு அஞ்சி நட. நெடுங்காலம் நிலை கொள்வாய். ஆண்டவருக்கு அஞ்சுவதால் நீங்கள் அவர் இரக்கத்தை அடைவீர்கள். நன்னெறி வழுவாதபடி அவரை மறவாதீர்கள். ஆண்டவருக்கு அஞ்சும் நீங்கள் அவரை விசுவசியுங்கள் உங்கள் சம்பாவனை வீணாகாது. ஆண்டவருக்கு அஞ்சும் நீங்கள் அவரை நம்புங்கள் அவர் இரக்கம் உங்கள் மகிழ்ச்சியாகும்.ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவர்களே, அவரை நேசியுங்கள் உங்கள் இதயங்கள் ஒளி பெறும்.மக்களே, எல்லா மனிதரையும் பாருங்கள் ஆண்டவரை நம்பின எவனும் கலங்கினதில்லை யென்று கண்டறியுங்கள்.

**பதில்பாடல்:** ஆண்டவரையே நம்பியிரு அவரே உன் சார்பில் செயலாற்றுவார்

## நற்செய்தி: மாற்கு 9: 30 – 37

இயேசு அங்கிருந்து புறப்பட்டுத் தமது சீடர்களோடு கலிலேயாவினூடே சென்றார்கள். அது யாருக்கும் தெரியக்கூடாது என்று விரும்பினார். ஏனெனில் ”மனுமகன் மனிதர்களிடம் கையளிக்கப்படுவார். அவர்கள் அவரைக் கொல்லுவார்கள். கொல்லப்பட்டு மூன்று நாளுக்குப்பின் உயிர்த்தெழுவார்” என்று தம் சீடருக்குப் போதிக்கலானார்.அவர் சொன்னது அவர்களுக்கு விளங்கவில்லை. அவரைக் கேட்கவும் அஞ்சினர்.கப்பர்நகூமுக்கு வந்தனர். வீட்டிலிருக்கும்போது அவர் அவர்களை நோக்கி, ”வழியில் என்ன வாதாடிக்கொண்டு வந்தீர்கள்?” என்று கேட்டார். அவர்களோ பேசாதிருந்தனர். ஏனெனில் ”பெரியவன் யார்?” என்பதைப்பற்றி வழியில் தங்களுக்குள் விவாதித்திருந்தார்கள். அப்போது அவர் அமர்ந்து பன்னிருவரையும் அழைத்து, ”ஒருவன் முதல்வனாய் இருக்க விரும்பினால் அவன் அனைவரிலும் கடையனாய் இருக்கட்டும் அனைவருக்கும் பணியாளன் ஆகட்டும்” என்றார்.பின்னர் ஒரு குழந்தையை எடுத்து அவர்கள் நடுவில் நிறுத்தி அதை அரவணைத்து ”இத்தகைய குழந்தைகளுள் ஒன்றை என் பெயரால் ஏற்றுக்கொள்ளுகிற எவனும் என்னையே ஏற்றுக்கொள்ளுகிறான். என்னை ஏற்றுக்கொள்ளும் எவனும் என்னையன்றுஎன்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்ளுகிறான்” என்றார்.

**தியானம்:** மானிடமகன் மக்கள் கையில் ஒப்படைக்கப்பட இருக்கின்றார். அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள் மூன்று நாட்களுக்குப் பின் அவர் உயிர்த்தெழுவார்”. (மாற் .9:31) இறைமகன் .இயேசு இரண்டாவது முறையாக தன் பாடுகளையும், இறப்பையும் முன்னறிவிக்கின்றார். சீடர்களால் அதைப்புரிந்து கொள்ள முடியவில்லை ஏனெனில் இயேசுவின் மனநிலையும், சீடர்களின் மனநிலையும் வெவ்வேறாக இருந்தன. இயேசு தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் மனநிலையில் இருந்தார். அவருடைய சீடர்களோ தங்களது எதிர்காலத்தை எண்ணி தங்களுக்குள் பெரியவன் யார் என்று வாதாடுகின்றனர். உலகப் பார்வையின்படி செல்வமும், புகழும் நிறைந்தவர் தான் தலைவர். ஆனால் சீடத்துவத்தில் அவர் கடைசியானவர் தன்னலமற்ற குழந்தையின் மனநிலையை ஒத்தவராக எவர் பணி செய்கின்றாரோ அவரே உண்மையான தலைவர் என்ற கருத்தை இயேசு முன்வைக்கின்றார். எமது வாழ்வின் ஆன்மீக வாழ்வின் உண்மை நிலை என்பது தாழ்ச்சி நிலையே. தாழ்ச்சியே உயர்வின் அடையாளம். எனவே தான் தாழ்ச்சியை ஆடையாக அணிந்து கொள்வோம். தமது பாடுகளையும் மரணத்தையும் முன்னறிவித்த இயேசு எம்பாவங்களுக்காக இறந்து எமக்கு மீட்பை பெற்றுத் தந்தார். நாம் விழிப்பாயிருந்து அந்த மீட்பை பெற்றுக்கொள்வோம்.